**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4033/ஆ5/2024, நாள். /10/2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – ஆளுமைத் திறன் மேம்பாட்டுச் செயல்பாடுகள் – பள்ளிகளில் "மகிழ் முற்றம்" குழுக்கள் அமைத்தல் – தொடர்பாக

பார்வை
1. மாண்புமிகு தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கை அறிவிப்புகள் எண்.4
2. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.32841/எம்1/இ1/2024, நாள். 01.10.2024

.....

பார்வை (2)–ல் கண்டுள்ள பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி, ஒரு மாணவனின் ஒட்டுமொத்த ஆளுமை வளர்ச்சிக்கு அம்மாணவனின் வகுப்பறை கற்றல் அனுபவங்களும், கல்வி இணைச் செயல்பாடுகள் மற்றும் கல்வி சாரா செயல்பாடுகளில் அம்மாணவர்களின் சிறப்பான பங்களிப்பும் காரணமாக அமைகின்றது. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 2024–2025ஆம் நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் ஆளுமைத் திறன் மேம்பாட்டுச் செயல்பாடுகள் குறித்து தமிழ்நாடு சட்ட பேரவையில் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

**ஆளுமைத் திறன் மேம்பாட்டுச் செயல்பாடுகள் –**

"அனைத்துப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே தலைமைப் பண்பை வளர்க்கும் வகையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் பெயர்களில் மாணவர் குழுக்கள் அமைத்து, மாணவத் தலைவர் மற்றும் மாணவ அமைச்சர்கள் தெரிவு செய்யப்படுவர். இதன் மூலம் மாணவர்களிடைய அரசியல் அறிவு சார்ந்த அனுபவங்கள் மற்றும் ஆளுமைத் திறன் மேம்பட, மாதிரி சட்டமன்றம் மற்றும் மாதிரி பாராளுமன்றம் நடத்தப்படும். இதற்காக தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும். இத்திட்டம் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

மேற்கண்ட அறிவிப்பின்படி, 2024–2025ஆம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும் மாணவர் குழு (House System) அமைப்பினை "மகிழ் முற்றம்" என்ற பெயரில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

குழுவாக இணைந்து செயல்படுதல், சமூக மனப்பான்மை, வேற்றுமைகள் இல்லாத பரஸ்பர ஆதரவு ஆகியவைகள்தான் மாணவர் குழு(House System) அமைப்பின் முதன்மை நோக்கமாகும். விளையாட்டு நடவடிக்கைகளுக்கு அப்பால், சமூக உணர்வை ஊக்குவிப்பதற்கும், குழுப் பணியை வளர்ப்பதற்கும், பல்வேறு கல்வி மற்றும் கல்விச்சாரா இணைச் செயல்பாடுகள் மூலம் மாணவர் தலைமையை ஊக்குவிப்பதற்கும் ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த அமைப்பு மாணவர்களின் தலைமைத்துவம், பங்கேற்பு மற்றும் ஆரோக்கியமான போட்டிகளுடன் மாணவர்களின் தனிப்பட்ட வளர்ச்சியையும், குழு செயல்பாடுகளில் ஈடுபடவும் ஊக்குவித்து மகிழ்சியான பள்ளிச் சூழலை உருவாக்குகிறது.

**மாணவர் குழு அமைப்பின் நோக்கங்கள் –**

- கற்றல் திறன் மேம்பாடு
- மாணவர்களின் ஊக்கம் மற்றும் பங்களிப்பை அதிகரித்தல்
- மாணவர்கள் விடுப்பு எடுப்பதை குறைத்தல்
- ஒற்றுமை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய கல்வியை ஊக்குவித்தல்
- அனைத்து மாணவர்களுக்குமான வாய்ப்புகள்

- நேர்மறை நடத்தைகளை வலுவூட்டுதல்
- தலைமைத்துவ பண்பை வளர்த்தல்
- ஆசிரியர் மாணவர்கள் உறவை மேம்படுத்துதல்

**"மகிழ் முற்றம்" – மாணவர் குழு – கட்டமைப்பு**

பள்ளியில் உள்ள அனைத்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஐந்து குழுக்களாக பிரிக்கப்படுவார்கள்.

| குழுக்களின் பெயர்கள் | குழுக்களின் நிறங்கள் |
|---|---|
| ❖ குறிஞ்சி | சிவப்பு |
| ❖ முல்லை | மஞ்சள் |
| ❖ மருதம் | பச்சை |
| ❖ நெய்தல் | நீலம் |
| ❖ பாலை | வெள்ளை |

இக்குழு அமைப்பில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களும் இடம் பெறுவர். ஒவ்வொரு வகுப்பிலும் பயிலும் மாணவர்கள், இவ்வைந்து குழுக்களிலும் இடம் பெறும் வகையில் பிரிக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கான குழுவானது EMIS தளத்தின் வாயிலாக ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு ஒவ்வொரு மாணவருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள குழுவின் தகவல் பள்ளி அளவில் EMIS தளத்தில் பார்க்க இயலும்.

மாணவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட குழுவில் 2 ஆண்டுகள் இருப்பார்கள், மாணவர்கள் வேறு பள்ளிக்கு மாறும் போது சம்பந்தப்பட்ட பள்ளியில் அவர்களுக்கான குழு EMIS தளத்தின் வாயிலாக ஒதுக்கப்படும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை EMIS தளத்தின் வாயிலாக மாணவர்களுக்கு புதிதாக குழுக்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

**" மகிழ் முற்றம்" அமைப்பு –**

- ✓ பள்ளியின் தலைமையாசிரியர் "மகிழ் முற்றம்" மாணவர் குழு அமைப்பினை திட்டமிட்டு வழி நடத்துதல் வேண்டும்.
- ✓ பள்ளியில் உள்ள ஒரு ஆசிரியர் – "மகிழ் முற்றம்" என்ற மாணவர் குழு அமைப்பிற்கான பொறுப்பாசிரியராக நியமிக்கப்படுதல் வேண்டும். (House System In–Charge Teacher)
- ✓ மற்ற ஆசிரியர்கள் அனைவருக்கும் குலுக்கல் முறையில் குழுவானது ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.
- ✓ ஒவ்வொரு குழுவிற்கும் ஒன்றிற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இருப்பின், தலைமை தாங்கும் ஆசிரியர் (House Head Teacher) கை தூக்கும் முறை / குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.
- ✓ இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பள்ளியளவில் "மகிழ் முற்றம்" – ஆசிரியர் கட்டமைப்பு மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும்.

| | |
|---|---|
| **தலைமையாசிரியர்** | **"மகிழ் முற்றம்" மாணவர் குழு அமைப்பினை திட்டமிட்டு வழி நடத்துதல் வேண்டும்.** |
| 5-ற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கொண்ட பள்ளிகள் | • ஒரு ஆசிரியர் "மகிழ் முற்றம்" மாணவர் குழு அமைப்பின் தலைமை பொறுப்பாளராக இருத்தல் வேண்டும். (House System In-Charge Teacher)<br>• மற்ற ஆசிரியர்களுக்கான குழு, குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.<br>• ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு பொறுப்பு ஆசிரியர் நியமிக்கப்படுதல் வேண்டும் (House Head Teacher) |
| 5-ற்கும் குறைவான ஆசிரியர்கள் கொண்ட பள்ளிகள் | • ஒரு ஆசிரியர் "மகிழ் முற்றம்" மாணவர் குழு அமைப்பின் தலைமை பொறுப்பாளராக இருத்தல் வேண்டும். (House System In-Charge Teacher)<br>• மற்ற ஆசிரியர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட குழுக்களுக்கு பொறுப்பு ஆசிரியராக குலுக்கல் முறையில் நியமிக்கப்படுதல் வேண்டும். (House Head Teacher) |

தலைமையாசிரியர் மட்டும் உள்ள பள்ளிகளில் "மகிழ் முற்றம்" மாணவர் குழு அமைப்பின் அனைத்து செயல்பாடுகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

**" மகிழ் முற்றம்" - மாணவர் குழு அமைப்பின் பள்ளி அளவிலான மாணவர் தலைவர் (House Captain)**

ஒவ்வொரு பள்ளியிலும், அப்பள்ளியின் உயர்வகுப்பில் பயிலும் மாணவர்களுள், ஒவ்வொரு மாணவர் குழுவிற்கும் இரண்டு தலைவர்கள் (House Captain) நியமிக்கப்படுதல் வேண்டும்.

இம்மாணவர் தலைவர்கள் (House Captain) தேர்வானது குலுக்கல் முறையில் நடைபெறுதல் வேண்டும். முதலில் ஒவ்வொரு குழுவிற்கும் தலைவராக இருக்க விருப்பம் தெரிவிக்கும் மாணவர்கள் மற்றும் மாணவிகளின் பெயர்களை துண்டுச் சீட்டுகளாக எழுதி அம்மாணவர்களின் முன்னிலையில் குலுக்கல் முறையில் ஒரு மாணவ குழுத் தலைவரையும், ஒரு மாணவி குழுத் தலைவரையும் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

இருபாலரும் பயிலும் பள்ளிகளில் ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி ஆகிய இருவரும் குழுத்தலைவர்களாக இருப்பர்.

ஒரு பாலருக்கான பள்ளிகளில், ஒவ்வொரு குழுவிற்கும் இரண்டு தலைவர்களும், அப்பள்ளியில் பயிலும் பாலினத்தை பொறுத்து அமையப்பெறும்.

இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும். பள்ளியளவில் மாணவர் தலைவர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும்.

**"மகிழ் முற்றம்" – மாணவர் குழு அமைப்பின் வகுப்பு தலைவர் (House Leader)**

ஒவ்வொரு வகுப்பிலும் மற்றும் வகுப்பிற்கான பிரிவிலும், ஒவ்வொரு குழுவிற்கான வகுப்பு தலைவர் (House Class Leader ) நியமிக்கப்படுதல் வேண்டும். இத்தேர்வானது குழுவின் வகுப்பு தலைவராக இருக்க விருப்பம் தெரிவிக்கும் மாணவ / மாணவியர்களின் பெயர்களை துண்டுச் சீட்டுகளாக எழுதி அம்மாணவர்களின் முன்னிலையில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். (குறிப்பு – ஒவ்வொரு வகுப்பிலும் மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில், குறைந்தது மூன்று குழுக்களுக்கான வகுப்பு தலைவர்கள் மாணவிகளாக இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்) ஒவ்வொரு மாதமும் குழுக்களுக்கான வகுப்பு தலைவர்கள் மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு குழுவிற்கான மாணவர் தலைவர்கள் (House Captain) வகுப்பு தலைவர்கள் (Class Leaders) மற்றும் தலைமை பொறுப்பு (ஆசிரியர் (House System In-Charge Teacher) குழுவிற்கான பொறுப்பு ஆசரியர்கள் (House Head Teacher) ஆகியோருக்கான பதவி ஏற்பு விழாவனது அனைத்துப் பள்ளிகளிலும் **குழந்தைகள் தினமான நவம்பர் 14-ஆம் தேதியன்று திட்டமிட்டு நடைபெறுவதை சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள் உறுதி செய்தல் வேண்டும்.**

**அவ்வாறு நடைபெறும் நிகழ்வினை புகைப்படங்கள் மற்றும் 5 நிமிடத்திற்கு தொகுக்கப்பட்ட காணொலியின் URL Link-யினை 19.11.2024-க்குள் EMIS தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும்.**

EMIS தளத்தின் வாயிலாக ஒவ்வொரு மாணவருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள குழுவினைப் பற்றி சார்ந்த மாணவருக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். பள்ளி அளவில் நடைபெறும் செயல்பாடுகளான கல்விசார் மற்றும் கல்வி சாரா செயல்பாடுகள், கல்வி இணைச் செயல்பாடுகள் மற்றும் மாணவர் வருகை போன்றவற்றின் அடிப்படையிலேயே ஒவ்வொரு குழுவிற்குமான மதிப்பெண்கள் வழங்கப்படும் என்பதைப் பற்றி விளக்கத்தினை மாணவர்களுக்கு எடுத்துரைத்தல் வேண்டும்.

"மகிழ் முற்றம்" என்ற மாணவர் குழு அமைப்பு பள்ளி அளவில் நடைமுறைப்படுத்தப்படுவதன் அடையாளமாக ஒவ்வொரு குழுவினை குறிக்கும் வண்ணத்திலான கொடி (House Flage) பள்ளி அளவில் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

பள்ளி அளவில் நடைபெறும் பல்வேறு செயல்பாடுகளில் மாணவர்களின் பங்கேற்பினை EMIS தளத்தில் உள்ளீடு செய்வதன் அடிப்படையில் புள்ளிகள் கணக்கிடப்படும். அவ்வாறு மேற்கொள்ளப்படும், கணக்கீட்டின் அடிப்படையில், ஒவ்வொரு மாத இறுதியிலும், அதிக புள்ளிகளைப் பெறும் குழுவானது அம்மாதத்தின் வெற்றி குழுவாக (House of the Month) அறிவிக்கப்பட்டு, அக்குழுவிற்கான வண்ணக் கொடி பள்ளியில் அனைவரின் பார்வைக்கு எதிர்வரும் மாதம் முழுவதும் காட்சிபடுத்தப்படுதல் வேண்டும்.

**"மகிழ் முற்றம்" – மாணவர் குழு தகவல் பலகை (House System Notice Board)**

மாணவர் குழு தகவல பலகை, பள்ளியில் அனைவரின் பார்வைக்கு உட்பட்ட இடத்தில் பொறுத்தப்படுதல் வேண்டும். இத்தகவல் பலகையானது தலைமையாசிரியர் அறையிலோ அல்லது வகுப்பறையிலோ இருத்தல் கூடாது. ஒவ்வொரு மாத இறுதியிலும், EMIS தளத்தில் அனைத்து செயல்பாடுகளின் பதிவேற்றத்தின் அடிப்படையில் ஒவ்வொரு குழுவிற்கும் வழங்கப்படும் புள்ளிகளை இத்தகவல் பலகையில் குறிக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

மேலும், ஒவ்வொரு வகுப்பறையிலும் அந்தந்த வகுப்பிற்கான மாணவர் குழுக்கள் பெற்ற புள்ளிகளை கரும்பலகையிலோ அல்லது ஒரு CHART-ல் காட்சிபடுத்துதல் வேண்டும்.

குறிப்பு - EMIS தளத்தின் வழியாக எடுத்துக் கொள்ளப்பட்ட செயல்பாடுகளுக்கான புள்ளிகளுடன், ஒவ்வொரு பள்ளியிலும், தலைமையாசிரியர் மற்றும் House Head Teacher சேர்ந்து தீர்மானிக்கும் செயல்பாடுகளுக்கும் புள்ளிகள் வழங்கப்படலாம். (எ.கா. EMIS தளத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படாத தரவுகளான நேரம் தவறாமை (punctuality) காலை வழிபாட்டு கூட்டத்தில் பங்கேற்றல் (Participation in Morning Assembly) வீட்டு பாடம் முடித்தல் (Homework Completion) தன் சுத்தம் (Personal Hygiene) போன்ற செயல்பாடுகளுக்கு அந்தந்த பள்ளியின் விருப்பத்தின் பேரில் செயல்பாடுகளுக்கான புள்ளிகள் நிர்ணயிக்கப்பட்டு ஒவ்வொரு வகுப்பறையிலும் பள்ளிக்கான மாணவர் குழு தகவல் பலகையிலும் கூடுதலாக இடம் பெறச் செய்யலாம்.

மேற்காணும் வழிமுறைகளை பின்பற்றி பள்ளிகளில் "மகிழ் முற்றம்" குழுக்கள் அமைத்து சிறப்புடன் செயல்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. இப்பொருள் சார்பாக பள்ளிகளில் "மகிழ் முற்றம்" குழுக்கள் அமைவதை உறுதி செய்யுமாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு - பார்வையின் கடித நகல்

ஒ/ப 14.10.24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் -

1. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலை) வேலூர் மாவட்டம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) வேலூர் மாவட்டம்.
3. மாவட்ட உதவி திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, வேலூர் மாவட்டம்.
4. அனைத்து வட்டாரக் கல்விஅலுவலர்கள், வேலூர் மாவட்டம்
(மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் மூலமாக)
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

நகல் -

1. சென்னை -6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. அனைத்து அரசு தொடக்க / நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம். (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)